167--

உசிலம்பட்டியில் சிமென்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*17539-**திருமதி இரா. பாண்டியம்மாள் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வெள்ளை மலைப்பட்டியில் அதிகமான அளவில் வெள்ளைக் கற்கள் கிடைப்பதால் அங்கு ஒரு சிமென்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம் வெள்ளைமலைப்பட்டியில் சிமென்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், எனது தொகுதியாகிய உசிலம்பட்டியில், வெள்ளைமலைப்பட்டி, உத்தமநாயக்கனூர், நடுப்பட்டி போன்ற கிராமங்களைச் சுற்றி 92 ஏக்கர் பரப்புள்ள இடங்களில் விலை உயர்ந்த கற்கள் தோண்டி எடுக்கப்படுகின்றன. இந்த கற்கள் அனைத்தும் பிற மாவட்டங்களாகிய துலுக்கப்பட்டி போன்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே எங்கள் பகுதிக்கு எந்தவிதமான பலனும் இல்லாமல் போய்விடுகின்ற காரணத்தினாலே அந்த கற்களை ஆராய்ந்து அரசு மீண்டும் முயற்சி எடுத்து அந்த உசிலம்பட்டியில் பின் தங்கிய மக்கள் வாழ்கின்ற அந்த பகுதியில் உள்ள அந்த மக்களுக்கு ஒரு வேலை வாய்ப்பினை அளிக்கின்ற வகையில், அரசு மீண்டும் ஆய்ந்து தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிமெண்ட் ஆலை லாபகரமாக செயல்பட வேண்டுமென்று சொன்னால், அதன் உற்பத்தித் திறன் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4 லட்சம் டன்கள் இருக்கவேண்டும். இந்த அளவு திறன் கொண்ட சிமெண்ட் ஆலை நிறுவ கீழ்க்கண்ட வசதிகளும், மூலப்பொருட்களும் தேவை.

(1) சுண்ணாம்புக்கல் 6.5 லட்சம் டன்கள்

1994 ஜனவரி 5]

(2) நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி 1 லட்சம் டன்கள்

(3) ஜிப்சம் 0.2 லட்சம் டன்கள்

(4) ரெயில்வே, சாலைப் போக்குவரத்து வசதிகள்

(5) மின்சாரம் 10 மெகா வாட்ஸ்

(6) தண்ணீர் நாளொன்றுக்கு சுமார் 5 லட்சம் டன்கள்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் தரம் குறைவானது என்றும் சிமெண்ட் தயாரிக்க தகுதியானது அல்ல என்றும் புவியியல் ஆய்வில் தெரியவந்துள்ளது. உயர்தரமான சுண்ணாம்புக்கற்களை தூரமான இடங்களில் இருந்து கொண்டுவந்து சிமெண்ட் ஆலை நிறுவுவது லாபகரமாக இருக்காது. எனவே உசிலம்பட்டி பகுதியில் அரசுத் துறையான டேன்சம் நிறுவனத்தின் மூலம் புதிய சிமெண்ட் ஆலை நிறுவக்கூடிய சாத்தியக்கூறு இல்லை. தனியார் துறை சிமெண்ட் ஆலை நிறுவ எவரும் அங்கே வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாண்டியம்மாள் அவர்கள் உருக்கத்தோடு கேட்ட காரணத்தினால் தனியார் யாரேனும் அதை அமைக்க முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

168--

ஆம்பூர் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம்.

*1991-டாக்டர் ஜெ. **பரந்தாமன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.